# நல்லாசிரியர் விருது 2020/2021

## சிறந்த தமிழ் ஆசிரியர்களுக்கான அங்கீகாரம்

ORGANISED BY:

தமிழ் முரசும் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கமும் தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவும், ஒன்றிணைந்து ‘நல்லாசிரியர் விருது’ வழங்குகின்றன. தமிழாசிரியர்களின் உன்னதப் பணியை அங்கீகரிக்கும் மிக உயரிய விருதாக இது கருதப் பெறுகின்றது.

கோவிட்-19 சூழலை முன்னிட்டு 2020/2021 ஆகிய ஆண்டுகளுக்கான நல்லாசிரியர் விருது நிகழ்வுகளை இணைத்து நடத்துவதென ஏற்பாட்டுக் குழு முடிவு செய்துள்ளது. இதன்வழி, 2020, 2021 ஆண்டுகளுக்கான அனைத்து நியமனங்களும் ஒருசேர ஒருங்கிணைக்கப்பட்டுத் தக்கவாறு மதிப்பிடப்படும். பரிசளிப்பு விழா இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ‘நல்லாசிரியர் விருது 2020/2021’ என்னும் பெயரில் வழங்கப்பெறும்.

**நல்லாசிரியர் விருதுக்குத் தகுதிபெறுவோர்:**

- ✓ தமிழ்மொழியின்பால் மாணவர்களுக்கு ஆர்வத்தையும் புத்துணர்ச்சியையும் ஊட்டிக் கற்பிப்பவராக விளங்க வேண்டும்.
- ✓ புத்தாக்கமும் படைப்பாக்கமும் கொண்ட கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டுக்கு வழிவகுப்பவராகத் திகழ வேண்டும்.
- ✓ மாணவர்களின் நலனில் அக்கறைகொண்டு அவர்களிடத்தில் விரும்பத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்

**நல்லாசிரியர் விருதுக்கு முன்மொழியும் வழிமுறை பற்றிய குறிப்புகள்:**

- ✓ விருதுக்குத் தகுதியானவர் எனத் தாங்கள் கருதும் தமிழாசிரியரைத் தெரிவுசெய்து, உங்கள் தெரிவுக்கான காரணங்களை விளக்கி எழுதி முன்மொழியும் படிவத்தை நிறைவுசெய்து அனுப்பவும். நீங்கள் பரிந்துரைக்கும் ஆசிரியர், விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவருக்கு விருதும் ரொக்கமும் வழங்கப்படும்.
- ✓ தொடக்கப்பள்ளி , உயர்நிலைப்பள்ளி, தொடக்கக்கல்லூரி, மத்திய கல்வி நிலையம் (Centralised Institution), சிறப்புத் தன்னாட்சிப் பள்ளிகள் (Specialised Schools) ஆகியவற்றில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் இவ்விருதுக்கு முன்மொழியப்படலாம்.
- ✓ மாணவர்கள், பெற்றோர்கள், சக ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள், பள்ளித் தலைவர்கள் ஆகியோர் நல்லாசிரியர் விருதுக்கு ஆசிரியர்களைப் பரிந்துரைத்து முன்மொழியும் படிவங்களை அனுப்பி வைக்கலாம்.
- ✓ முன்மொழிவுப் படிவங்களை அனுப்பி வைக்கவேண்டிய இறுதிநாள்– **30 ஏப்ரல் 2021**

**விருதுக்கான விதிகளும் நிபந்தனைகளும்:**

- ✓ முன்மொழியும் காலகட்டம் **08 பிப்ரவரி 2021** அன்று துவங்கும்.
- ✓ கடந்த மூன்று ஆண்டுகளில் விருது பெற்ற ஆசிரியர்கள் இவ்வாண்டு விருதுக்குக் கருதப்படமாட்டார்கள்.
- ✓ விருதுக்குப் பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்கள் விருது வழங்கப்பெறும் காலத்தில் தொடர்ந்து ஆசிரியர் பணியில் இருக்க வேண்டும்.
- ✓ முழுமையாக நிறைவுசெய்யப்படாத படிவங்களும் காலந்தாழ்த்திச் சமர்ப்பிக்கப்படும் படிவங்களும் விருது நியமனத்திற்குக் கருத்திற் கொள்ளப்படமாட்டா.
- ✓ விருது பெறும் ஆசிரியர்களுக்கு $2000 ரொக்கப் பரிசும் விருதும் வழங்கப்படும். அவர்களின் நேர்காணலும் கற்பித்தல் அனுபவமும் தமிழ் முரசு செய்தித்தாளிலும் தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவின் சமூக ஊடகத் தளங்களிலும் வெளியிடப்படும்.
- ✓ விருது பெறும் ஆசிரியர்கள் தங்களது கற்பித்தல் உத்திகளைப் பிற ஆசிரியர்களுடன் பகிர்ந்துகொள்ள அழைக்கப்படுவார்கள்.

---

# முன்மொழியும் படிவம்

**முன்மொழியப்படும் ஆசிரியர் பற்றிய விவரங்கள்:**

| | |
|---|---|
| ஆசிரியரின் முழுப் பெயர் | |
| பள்ளியின் முழுப் பெயரும் முகவரியும் | |
| தொலைபேசி எண் | |

**முன்மொழிபவர் பற்றிய விவரங்கள்:**

| | |
|---|---|
| முழுப் பெயர் | |
| முகவரி | |
| தொலைபேசி எண் | |
| மின்னஞ்சல் முகவரி | |
| முன்மொழியப்படுபவரோடு கொடண்டுள்ள தொடர்பு (தயவுசெய்து வட்டமிடவும்) | மாணவர் / மாணவரின் பெற்றோர் / சக ஆசிரியர் / முன்னாள் மாணவர் / பள்ளித் தலைவர் |

**முன்மொழிவதற்கான காரணங்கள்:**

1. நீங்கள் முன்மொழியும் ஆசிரியரிடம் காணப்பெறும் தனிச்சிறப்பை விளக்கவும்.
2. விருதுக்கு முன்மொழியப்படும் ஆசிரியர் எவ்வாறு தமிழ்மொழியின்பால் ஆர்வத்தையும் புத்துணர்ச்சியையும் மாணவர் மனங்கொள்ளுமாறு கற்பிப்பவராகத் திகழ்கின்றார் என்பதை விளக்கவும்.
3. முன்மொழியப்படும் ஆசிரியர் புத்தாக்கமும் படைப்பாக்கமும் கொண்ட கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டுக்கு வழிவகுப்பவராக எங்ஙனம் விளங்குகிறார் என்பதனைச் சான்றுகளுடன் விளக்கி எழுதவும்.
4. முன்மொழியப்படும் ஆசிரியர் மாணவர்களின் நலனில் அக்கறைகொண்டு அவர்களிடத்தில் விரும்பத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதற்குச் சான்றுகள் தந்து விளக்கவும்.

* (நீங்கள் முன்மொழிவதற்குரிய காரணங்களைத் தெளிவாகவும் சான்றுகளுடனும் விளக்கி எழுதவும்.)______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

குறிப்பு: முன்மொழிவதற்கான காரணங்களைப் பின்னிணைப்பாகவும் இணைத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்:

**பெயர் & கையொப்பம் :**________________________________

நிறைவு செய்யப்பட்ட படிவங்களை
ஏப்ரல் 30ஆம் தேதிக்குள்
இந்த முகவரிக்கு அனுப்பி
வைக்க வேண்டும்!

**TAMIL MURASU**
**MITT Secretariat**
**1000 Toa Payoh North,**
**News Centre,**
**Singapore: 318994**